பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்:
வே. வ. இராமசாமி

CONNEMARA PUBLIC LIBRARY
30 MAR 1964
MADRAS



வெளியிடுவோர்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்.

சென்னை-17.

சோபகிருது - பங்குனி

விலை : 25 ந.பை.

பொருளடக்கம்

பக்கம்

1. பதநீர் காலம் ஆரம்பித்துவிட்டது—(தலையங்கம்)
—திரு. வே. வ. இராமசாமி ... 3

2. தொழில் கூட்டுறவு சங்கங்கள்—
ஏழை அரிஜனப் பெண்களின் கூட்டுறவு முயற்சி ... 5
ஜாப்பராபேட்டை எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் ... 7

3. பனை வளர்ப்புப் பண்ணை நிறுவுங்கள்—திரு. கோ. வேங்கடாசலபதி ... 9

4. 1,000 வல்லுநர்களுக்கு பதநீர் காய்ச்சும் கொப்பரைகள் ... 10

5. கார்போ—ஹைடிரேட்டுகள் ... 13

6. நெல்லை மாவட்டத்தில் பனைத் தொழில் ... 14

7. திரு. சம்பந்தம் அவர்களுக்கு வாழ்த்து மடல்
—திரு. கோ. செல்வம், பி.ஏ., பி.எல்., பிடி. ... 19

8. சுற்றறிக்கைகள் முதலியன ... 20

ஆண்டுச் சந்தா ரூ. 3

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 சோபகிருது௵ பங்குனி௴ பாளை 6

பதநீர் காலம் ஆரம்பித்துவிட்டது

(வே. வ. இராமசாமி)

பதநீர்ப் பருவ காலம் தொடங்கிவிட்டது. கோடைக்காலத்தில் மக்களுக்கு சுகாதார முறையில் பதநீர் வழங்க தமிழ் நாட்டில் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முக்கியமாகப் பெரிய நகரங்களில் படிக்கும் குழந்தைகளின் உடல்நலனைப் பேணி வளர்ப்பதற்காக அவர்களுக்குப் பாதி விலையில் பதநீர் வழங்க மாநில சம்மேளனம் முன்வந்துள்ளது. இந்த வாய்ப்பை எல்லா ஆரம்பப் பள்ளிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி செய்தால் ஊட்டச் சத்துள்ள உணவை சிறுவர், சிறுமிகள் அருந்துவதால், சிற்சில நோய்கள் நீங்கி, உடல் நலம்பெற்று திடகாத்திரர்களாக வளர்ச்சி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. இக்காலத்தில் பதநீரைப் பரிசோதனை செய்ததால் நல்ல ஊட்டச் சத்தும், உணவுச் சத்தும் அடங்கியுள்ளன என்பதை தேர்ச்சிபெற்ற மருத்துவ நிபுணர்கள் கூறியிருப்பது மக்களுக்குத் தெரிந்ததே.

'பதநீர் உடலுக்குக் குளுமை அளித்து, உற்சாகத்தை ஊட்டுகிறது' என்று பிரபல மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார். பதநீர்ப் பருவகாலத்தில் தங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு பதநீர் வழங்கும் வாய்ப்பை ஆரம்பப் பள்ளிகள் பயன்படுத்திக்கொள்ளும் என்று கருதுகிறோம்.

வயதுவந்த மக்களும் இப்பருவ காலத்தில் சுகாதார முறையில் வழங்கப்படும் பதநீரைப் பருகினால் அவர்களும் தங்கள் வியாதிகளைப் போக்கி திடகாத்திரம் உடையவர்களாக இருக்க வழி செய்துகொள்ளலாம்.

அழுமலையில் பனைவெல்ல வழிகாட்டி மாநில ஆராய்ச்சி நிலையம்

துணை ராஷ்டிரபதி ஜாகிர் உசேன் விஜயம்

பனை இன மரங்களின் ஒவ்வொரு பாக மும், சில சமயங்களில் எதிர்பாராத வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று அழுமலையிலுள்ள மத்திய (ஈச்சை) பனை வெல்ல வழிகாட்டி ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்த துணை ராஷ்டிரபதி டாக்டர் ஜாகீர் உசேன் பாராட்டியுள்ளார்.

பல மாநிலங்கள் சேர்ந்து கூட்டாக நடத் தும் செஞ்சிலுவை ஆராய்ச்சி முகாமுக்கு அழுமலைக்கு துணை ராஷ்டிரபதி ஜாகீர் உசேன் விஜயம் செய்தார். அந்தச் சந்தர்ப் பத்தில் 28—10—'63 நண்பகல் 12 மணிக்கு மத்திய பனை (ஈச்சை) வெல்ல வழிகாட்டி மாதிரி ஆராய்ச்சி நிலையத்தையும் அவர் பார்வையிட்டார். அவ்வமயம் பல ஆராய்ச் சிப் பிரிவுகளையும், அதன் மேல் பார்வை யாளர் (சூபரிண்டெண்ட்) திரு. என். எஸ். பண்டிட் காண்பித்தார். ஈச்சையிலிருந்து இறக்கப்படும் நீராவும் அதிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தங்களும் அவருக்கு அளிக்கப்பட்டன. அவர் அவற்றை ருசியுடன் அருந்தினார்.

பனைவெல்லத் தொழில் பற்றிய திரைப் படக் காட்சியையும் துணை ராஷ்டிரபதி கண்டு களித்தார். துணை ராஷ்டிரபதியுடன் ராஜஸ்தான் கல்வி அமைச்சரும், ராஜ ஸ்தான் கதர், கிராமக் கைத்தொழில்கள் கழகத் தலைவருமான திரு. ஹரிஹர உபாத்தியாயாவும் சென்றார்.

பார்வையாளர் பதிவுப் புத்தகத்தில் துணை ராஷ்டிரபதி டாக்டர் ஜாகீர் உசேன் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:—

"கஜூரா ஆராய்ச்சி நிலையத்தில் நடை பெறும் ஆராய்ச்சிகளைக் கவனிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இவற்றைப் பார்த்து பெரு மிதம் அடைகிறேன். திறமையாகவும் நன்றாகவும் வேலை நடைபெறுகிறது. ஈச்ச மரத்தின் ஒவ்வொரு பாகமும், சில சமயங் களில் எதிர்பாராத விதத்தில் பயன்படுத்தப் படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட சில உணவுப் பண்டங்களை ருசியுடன் அருந்தினேன். இந்த நிலையம் சீரும் சிறப் புடனும் வெற்றிகரமாக செயல்பட வேண்டு மென்பது எனது அவா." ★

மதுபானத்தால் தீமைகள் உண்டாகும்

பெரும்பாலான குற்றங்களுக்கு மதுபானம்தான் காரணம். மதுபானப் பழக்கத்தால், தற்கொலைகள், மூளைக்கோளாறுகள் உண்டாகின்றன; மரணங் களும் சம்பவிக்கின்றன. இவை தவிர, நோய்கள் பரவுகின்றன; வறுமைப்பிணி அதிகமாகிறது; அளவுக்கு மீறின காமத்தால், மேகநீர் சம்பந்தமான வியாதிகள் உண்டாகின்றன, இறுதியாக குடும்பங்களே சின்னாபின்னமாகி விடுகின்றன. இவையெல்லாம், மதுபானம் அருந்தும் பல நாடுகளில் ஏற்பட் டுள்ள அனுபவமாகும். சுவிட்ஜர்லந்தில் 15 பெரிய நகரங்களில் சேகரிக்கப் பட்ட புள்ளி விவரங்களிலிருந்து, பெரும்பாலான தற்கொலைகளுக்கும், மரணங் களுக்கும் குடிப்பழக்கமே முக்கிய காரணம் என்பதாகத் தெளிவாகத் தெரிய வருகிறது.

—ஓர் ஆங்கில வெளியீடு.

ஏழை ஹரிஜனப் பெண்களின் கூட்டுறவு முயற்சி

திருச்சி மாவட்டத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறது

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இராயவரம் கிராமத்தில் ஹரிஜனப் பெண்களின் ஆதரவுடன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கிராமக் கைத்தொழில்கள் கூட்டுறவு சங்கம் நன்கு இயங்கி வருகிறது. மொத்தம் 61 உறுப்பினர்களில் 52 பேர்கள் பெண்கள். இந்தச் சங்கத்தின் நிருவாகிகளில் (டைரக்டர் களில்) நால்வர் பெண்கள் ஆவர்.

கைக்குத்தல் அரிசியும், நாட்டுச்செக்கு எண்ணெய் உற்பத்தி செய்து அதை விற்பனை செய்வதும்தான் இச்சங்கத்தின் முக்கிய தொழில்கள் ஆகும். கிராமங்களில் இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்பது கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரியும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இராயவரம் கிராமத்தில் 10—8—'60-ல் ஸ்ரீமுத்து மாரியம்மன் கிராமக் கைத்தொழில்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் அடங்கிய ரெவினியூ வட்டம் முழுவதிலும் இந்த சங்கம் செயலாற்றி வருகிறது. இது பதிவு செய்யப்படுவதற்கு முன், 1944-வது ஆண்டு முதற் கொண்டே இராயவரம் கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஆதரவில் இவ்வட்டத்தில் கைக்குத்தலரிசித் தொழில் நடைபெற்று வந்தது. ஆனால் தனிக்கவனம் செலுத்தப்படாததால் இத்தொழில் வளர்ச்சி அடையவில்லை. இந்த நிலையைப் போக்க, ஸ்டோர்ஸின் காரியதரிசியின் முயற்சியால், ஸ்ரீமாரியம்மன் கிராமக் கைத்தொழில்கள் சங்கம் தொடங்கப்பட்டது. பின்னர் அவரே இச்சங்கத்தின் தலைவராக ஆனார். ரூ. 305 பங்கு மூலதனத்துடன் 33 உறுப்பினர்கள் கொண்ட இத்தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. இப்பொழுது 61 உறுப்பினர்கள் உளர்; சங்கத்தின் பங்கு மூலதனம் ரூ. 5,005 ஆகும். சங்கம் இயங்கிவரும் இடம் 10 வருஷ காலத்திற்குக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த இடத்தையே விலைக்கு வாங்கி சங்க அலுவலகக் கட்டிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 61 உறுப்பினர்களில் 52 பேர்கள் பெண் தொழிலாளர்கள், 5 பேர் ஆண்கள். அனுதாபிகள் 4 பேர்கள். கைக்குத்தல் தொழிலை வளம் பெறச் செய்ய வேண்டுமென்று அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். 95 சத விகிதம் உறுப்பினர்கள் ஏழை ஹரிஜனங்கள். வேலை செய்யும் உறுப்பினர்களுக்கு நாள்தோறும் தொடர்ந்து வேலை அளிக்கப்பட்டு வருகின்றது. நாள் ஒன்றுக்கு ஒரு தொழிலாளிக்கு ரூ. 1—50 ஊதியம் கிடைக்கிறது.

இந்த சங்கம் தொடங்குவதற்கு முன்னர் பெண்கள் பக்கத்திலுள்ள காடுகளிலிருந்து கஷ்டப்பட்டு விறகு சேகரித்து வந்தால் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 நயே பைசே வரைதான் கிடைத்தது. ஆனால் இப்பொழுதோ வெளியில் வீட்டுக்குள்ளிருந்தே சௌகரியமாக வேலை செய்து நல்ல வருவாய் தேடிக் கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

கைக்குத்தல் அரிசி தவிர, நாட்டுச் செக்குகளில் நல்லெண்ணெய் உற்பத்தி செய்யவும் ஏற்பாடாகி உள்ளது. வார்தா முறையில் எண்ணெய் ஆட்டும் இரண்டு செக்குகளும், தமிழ் நாட்டில் வழங்கும் 3 நாட்டுச் செக்குகளும் உள. மாதம் ஒன்றுக்குத் தோராயமாக 100 டின்கள் நல்லெண்ணெய் உற்பத்தியாகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற உற்பத்தி அளவு, விற்பனை, இலாபம் முதலிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன:–

ஆண்டு	கொள்முதல்	விற்பனை	உற்பத்தி	கூலி கொடுத்தது	நிகர இலாபம்
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1960—61...	42,309	45,919	49,753	2,991	2,788
1961—62...	1,82,209	1,79,957	1,55,567	10,211	17,067
1962—63...	2,34,362	2,96,290	2,82,683	20,857	18,363
1—4—63 முதல் 30-11-63	1,21,716	1,73,423	1,78,312	12,477	12,181

கடன் வசதி

மூலப் பொருள்களை வாங்குவதற்காக, மாநிலக் கதர், கிராமக் கைத்தொழில் கழகத்திடமிருந்து இந்த சங்கம் ரூ. 1.39 இலட்சம் கடன் வாங்கியது. பின்னர் ரூ. 0.54 இலட்சம் திரும்பக் கொடுக்கப்பட்டுவிட்டது. சிறைச் சாலைகள், மருத்துவ விடுதிகள், மாணவர்கள் விடுதிகளுக்கு நல்லெண்ணெயும், கைகுத்தல் அரிசியும் சப்ளை செய்யப்படுகின்றன. இது தவிர பொது மக்களுக்கும் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இச் சங்கத்தின் ஆதரவில் கிராமோத்யோக் விற்பனை நிலையமும், சிறிய சந்தை (மார்க்கெட்டிங் நிலையமும்) இயங்கி வருகின்றன.

பெண் நிருவாகிகள்

ஏழு உறுப்பினர்கள் அடங்கிய குழு (டைரக்டர்கள்) வினரால் இந்தச் சங்கம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. எழுவரில், நால்வர் பெண்கள் ஆவர். நல்ல பழுத்த சமூக ஊழியர் திரு. இராம ஸ்ரீநிவாசன் இந்தச் சங்கத்தின் தலைவர்; அவருடைய தலைமையின்கீழ் இந்தச் சங்கம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

சங்கத்தின் பொருளாதார நிலை

ரிசர்வ் நிதியாக ரூ. 7,943 சேகரிக்கப்பட்டுள்ளது. நடப்புக் கணக்கில் (Current Account) ரூ. 17,095 உள்ளது. சர்க்கார், மின்சார இலாகாப் பத்திரங்களில் ரூ. 4,200 வரை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாகிகளின் தன்னலமற்ற சேவை, ஏழை ஹரிஜனப் பெண்களின் விசுவாசம் ஆகியவற்றின் காரணமாக இந்த சங்கம் பொலிவுள்ள முன் மாதிரியாக இயங்கி வருகிறது எனலாம். உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் அதன் சேவையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் உள. ✱

புற்று நோய்க்கு 'லேஸர் சிகிச்சை'

சீமை எலிகளில் புற்று நோயைக் கட்டுப்படுத்த வலிமை வாய்ந்த 'லேஸர்' ஒளிக்கற்றை ஒன்றைப் பயன்படுத்தியுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்சொன்ன சோதனை இன்னமும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றது. சீமை எலிகளின் தாடைப் பைகளில் பலவகைப் புற்று நோய்க் கட்டிகளைச் செலுத்தினர். பின்னர், 'லேஸர்' ஒளிக் கற்றையைப் பாய்ச்சி சிகிச்சை செய்து சோதித்தபோது, சில நாட்களில் புற்று நோய்க் கட்டிகள் சிறிதாகிக்கொண்டே வந்து பின்பு மறைந்துவிட்டதாகத் தோன்றியது.

ஜாப்பராபேட்டை எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்

இலாபத்தில் போனஸும், டிவிடெண்டும் அளித்துவரும் செக்காட்டும் நல்லெண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இம்மாதிரி இயங்கிவருவது வடாற்காடு மாவட்டத்தில் ஜாப்பராபேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் சங்கமாகும்.

இச்சங்கம் நடைபெற்று வருவது பற்றிய விவரம் கீழே தரப்படுகிறது:—

வட ஆற்காடு மாவட்டத்தில் ஜாப்பரா பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழிற் சங்கம் 24—7—'57-ல் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் 27 உறுப்பினர்களே இருந்தார்கள். பங்கு மூலதனம் ரூ. 337—50. இன்று 32 உறுப்பினர்கள் உளர். பங்கு மூலதனம் ரூ. 35,063—50. இங்கு 31 நாட்டுச் செக்குகளில் எண்ணெய் ஆட்டப்படுகின்றன. தேர்ச்சி பெற்றவர்களும், மற்றவர்களுமாக மொத்தம் 32 பேர்கள் வேலை செய்கின்றனர்.

கீழ்க்கண்ட இனங்களுக்காக சங்கம் கடன் தொகைகள் பெற்றுள்ளது:—

உறுப்பினர்கள் பங்கு முதலீட்டுக்காக	...	ரூ. 2,625
மூலதனம்	...	ரூ. 72,000
எள்ளு, எண்ணெய் வித்துக்கள் வாங்க	...	ரூ. 14,000

இவற்றில் மூலதனத் தொகையில் ரூ. 25,500 பாக்கியாக உள்ளது.

சங்கம் தொடங்கப்பட்டதிலிருந்து, இது வரை உற்பத்தி, விற்பனை ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வருஷம் வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது:—

வருஷம்	வேலை செய்யும் செக்குகள் எண்ணிக்கை	உற்பத்தி ரூ.	விற்பனை ரூ.	அளிக்கப்பட்ட ஊதியம் ரூ.
1957—58 ...	17	19,839	13,934	952
1958—59 ...	41	2,57,575	2,55,751	17,262
1959—60 ...	48	5,80,322	5,82,964	42,862
1960—61 ...	46	5,57,177	5,69,544	35,471
1961—62 ...	35	5,0[illegible],057	5,35,495	30,125
1962—63 ...	30	4,57,892	4,66,348	31,082
1—4—63 முதல் 30—10—63	31	2,99,688	3,01,939	19,216

மார்க்கெட்டில் மூலாதாரமாக விளங்குகிறது

இந்தச் சங்கத்தில் உற்பத்தியாகும் நல்லெண்ணெய், வேலூர் மத்திய சிறை, சப்-ஜெயில், சர்க்கார் பெண்ட்லெண்ட் மருத்துவ விடுதி, அனாதை விடுதிகள், பல தாலுக்காகளிலும் உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகள், சப்-ஜெயில்கள் முதலியவற்றிற்கு விற்கப்படுகின்றன. அலமாடியிலுள்ள வறட்டு பசுக்கள் பராமரிப்புப் பண்ணை, சென்னை, தேனும்பேட்டையிலுள்ள கோழி வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், ராணிப்பேட்டை மருந்துக் கழகம், செயற்கைக் கருத்தரிக்க வகைசெய்யும் நிலையம் ஆகியன எள்ளுப் புண்ணாக்கை விலைக்கு வாங்குகின்றன. வேலூர் நகரிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள எண்ணெய் மார்க்கெட்டில்

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இச்சங்கம் திகழ்ந்து வருகிறது.

ஓர் ஆயிரத்து அறுநூறு எள்ளு மூட்டைகளைச் சேமித்து வைப்பதற்காக 'ஏ' டைப் கிடங்குக் கட்ட ரூ. 10,000 கடனாகவும், ரூ. 10,000 மானியமாகவும் இந்தச் சங்கத்துக்கு வழங்கப்படுகிறது. இக்கிடங்கு கட்டுவதற்கான மனை ஒன்றை, புறம்போக்குப் பகுதியில் இனாமாக வழங்குவது குறித்து கிராமப் பஞ்சாயத்து ஆலோசனை செய்து வருகிறது.

சில ஆண்டுகளாக இலாபத்துடன் இந்தச் சங்கம் செயலாற்றி வருகிறது. நிகர லாபத்திலிருந்து போனஸாக ரூ. 2,125-86-ம், டிவிடெண்ட், ரூ. 260-74-ம் 59 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு என்று 12—11—1963-ல் நடைபெற்ற விழாவில் சென்னைக் கூட்டுறவுத் துறை அமைச்சரும், சென்னை மாநிலக் கதர், கிராமக் கைத்தொழில்கள் குழுத் தலைவருமான திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் போனஸை வழங்கினார். தீபாவளிப் பண்டிகையையொட்டி வாங்கியிருந்த கதர் துணிகளையும் திரு. மன்றாடியார் உறுப்பினர்களுக்கு வினியோகித்தார். உறுப்பினர்கள் கதர் வாங்குவதற்கும் கடனுதவி அளிக்கப்பட்டது.

ரேடியோ இயக்கி வைக்கப்பட்டது

சங்கத்தின் சமூக நல நிதியிலிருந்து வாங்கப்பட்ட ரேடியோ செட்டும் அவ்வமயம் இயக்கிவைக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு ஏற்பாடுகள் செய்த வேலூர் மாவட்ட கிராமக் கைத்தொழில்கள் அதிகாரி திருவாளர் வி. ர. ச. வாசுலிங்கம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

விற்பனைக்குத் தயார்

பனைத் தொழில்	...	ரூ. 3—50
இனிக்கும் பதநீர்	...	ரூ. 0—50

திரு. கே. சம்பந்தம் அவர்கள் எழுதியுள்ள மேற்கண்ட இரு நூல்களும் விற்பனைக்கு தயாராகி உள்ளன. பனைத் தொழில் இசைத் தட்டுகளும் கிடைக்கும்.

வெளியிடுவோர் :

சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-17.

பனை வளர்ப்புப் பண்ணை நிறுவுங்கள்

திரு. கோ. வேங்கடாசலபதி,
(இணை அபிவிருத்தி ஆணையாளர்)

மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்கள், 1—3—1964-ல் இணை அபிவிருத்தி ஆணையாளர் (Additional Development Commissioner) திரு. கோ. வேங்கடாசலபதி அவர்களை இல்லத்தில் சந்தித்து மாநிலச் சம்மேளன வெளியீடான 'பனைத் தொழில்' புத்தகத்தைக் கொடுத்தார்கள். இதுபோன்ற நூல்களை அதிகமாக வெளியிட வேண்டுமென்றும், கிராம ராஜ்யம், கிராம நலம், முதலிய பத்திரிகைகளையும் பயன்படுத்தி பனைத் தொழில் விளக்கங்களையும், பொது மக்கள் அறியும்படி செய்ய வேண்டுமென்றும், ஆலோசனை கூறினார்கள். எவ்வளவுதான் பிரசாரம் செய்தபோதிலும், அது அந்த நேரத்தில் மட்டுமே பலன் தருகிறதென்றும், நிலையான நல்ல பயனையும்தரக் கூடிய ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டு பொது மக்கள் மத்தியில் உலவச் செய்ய வேண்டுமென்றும் கூறினார்கள். மாநிலச் சம்மேளனம் இந்நூலை வெளியிட்டுள்ளதை பாராட்டினார்கள்.

'கிராம நலம்' 45,000 பிரதிகளும், கிராம ராஜ்யம் 25,000 பிரதிகளும் விற்பனையாகின்றனவென்றும். இவை தமிழ்நாடு எங்குமுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அனுப்பப்படுவதால், இதன்மூலம் பனைத் தொழிலைப் பற்றிய விளக்கங்களை எடுத்துக் கூறலாம் என்றும், சொன்னார்கள். கிராம நலத்தில் பிரசுரிப்பதற்கான கட்டுரைகளையும், தொழில் வளம், வேலை வாய்ப்பு, மாவட்டச் செய்திகள், முதலியவற்றையும் அனுப்பிவைக்குமாறு கூறினார்கள்.

தாம் செல்லும் இடமெல்லாம், பனைமரம் நடவேண்டுமென்று கூறி வருவதாகத் தெரிவித்தார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் மரம் நடுவதாகத் தெரிவித்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த பட்சம் 10,000 பனைகளாவது நடவேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

பலனை சந்ததியார் அனுபவிப்பர்

இன்று நாம் செய்யும் நல்ல காரியத்தின் பலனைப் பிந்தித்தான் அடைகிறோம். அதைப்போலவே, இன்று நடும் பனைகளை எதிர்கால சந்ததி பயன்படுத்திப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பனை நடும் திட்டத்தை அமுலாக்க வேண்டும். பனை மரங்களை நடவோ, பாதுகாத்து வளர்க்கவோ, சிரமும் இல்லை, செலவும் இல்லை. பனை நடுவது பற்றிய சுற்றறிக்கை ஒன்றைத் தாம் கிராம நலத்தில் வெளியிடுவதாகவும் தெரிவித்தார்கள்.

கிராமப் பொருளாதாரம் உறுதிப்படவேண்டும்

நெல்லை விற்றுத் தேக்கு மரம் வாங்குவதோ, வேறு உணவுப் பண்டங்களை விற்று சீனி வாங்குவதோ கூடாது. நமக்கு வேண்டிய பனஞ்சீனியைப் பனைகளிலிருந்து பெறுவோமானால், கிராமப் பொருளாதாரம் உறுதிப்படும். எனவே தரமான பனை வளர்க்க பனங்கன்றுப் பண்ணை (Palm Nursery) நிறுவி எல்லோருக்கும நல்ல பனங் கொட்டைகளை விநியோகிக்க ஏற்பாடு செய்யும்படி கூறினார் தமது உறவினருக்குச் சொந்தமான சுமார் 30 ஏக்ரா நிலம், திண்டுக்கல் நத்தம் நெடுஞ்சாலையில் 11-வது கல் தொலைவிலுள்ள ஐந்து, கோவில் பட்டிக்கு அருகில் இருப்பதாகவும், அதில் தென்னை மரம் நடத் திட்டமிட்ட போது தாம் பனை மரம வளர்க்கும்படி ஏற்பாடு செய்திருப்பதாகவும், தெரிவித்தார்கள். பனை மரத்தின் தகுதியையும் பொருளாதார மேம்பாட்டையும் எடுத்துக் கூற திரு. கஜானன் நாய்க் போல் தன்னலமற்ற சேவை செய்ய வேண்டுமென்று கூறினார்கள்.

1,000 வல்லுநர்களுக்கு பதநீர் காய்ச்சும் கொப்பரைகள்

சென்ற 16—2—1964-ல் கோவை மாவட்டத்திலுள்ள 1,065 வல்லுநர்களுக்கு பதநீர் காய்ச்சும் கொப்பரைகள் வழங்கப்பட்டன. பெருந்துறையில் நடைபெற்ற விழாவின்போது, சென்னை மாநிலக் கதர், கிராமக் கைத்தொழில் குழுத் தலைவரும், சென்னை மாநில அமைச்சருமான திருவாளர் என். எஸ். எஸ். மன்றாடியார் அவற்றை வினியோகம் செய்தார்.

இவ்விழாவில் நூற்றுக்கணக்கில் பனைத் தொழில் வல்லுநர்களும், பொது மக்களும் ஏராளமாகக் குழுமி இருந்தார்கள்.

சென்னை மாநில கதர், கிராமக் கைத் தொழில் குழு உறுப்பினர் திரு. கே. பி. வி. கிரி இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

சென்னை மாநில கதர், கிராமக் கைத் தொழில் குழு உறுப்பினரும், மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத் துணைத் தலைவருமான திரு. கே. இராமலிங்கம் எல்லோரையும் வரவேற்றார்.

கதர், கிராமக் கைத்தொழில் குழு காரியதரிசி, திரு. வெ. பத்மநாபன் பேசுகையில் சென்னை மாநிலத்தில் பனைவெல்லத் தொழில் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்ட பல திட்டங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்தொழிலில் ஆற்ற வேண்டிய பணியையும் குறித்து அவர் விளக்கிக் கூறினார்.

பின்னர் கோயமுத்தூர் மாவட்ட சம்மேளனத் தலைவர் இவ்விழாவில் கலந்துக் கொண்டு வெற்றிகரமாக நடத்திவைத்த தலைவர்களுக்கும், ஏனையோருக்கும் நன்றி தெரிவித்தார்.

இவ்விழாவையொட்டி, பல கிராமத் தொழில் பண்டங்கள், கதர் ஆகியன அடங்கிய ஒரு பொருட்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோவை மாவட்டத்தில் நல்ல முன்னேற்றம்

கோவை மாவட்டத்தில் பனைவெல்லத் தொழில் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்துள்ளது. மொத்தம் 247 பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 32,962 உறுப்பினர்கள் உளர். ரூ 2,48,144 பங்கு மூலம் வழங்கப்பட்டது. பொது மக்களுக்கு வழங்கவும், கருப்பட்டி காய்ச்சவும், பதநீர் இறக்குவதற்காக 20,530 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 8,02,304 பனைகளில் பதநீர் இறக்கப்பட்டு வருகின்றது. 1953-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட கோயமுத்தூர் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்துடன் 247 பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

சங்க உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்கி அவர்கள் உற்பத்தி செய்யும் பனைவெல்லத்தை விற்பனை செய்ய சம்மேளனம் ஏற்பாடு செய்து வருகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்கு ஏற்றவாறு பனைவெல்லம் உற்பத்தி செய்ய பல முறைகளைக் கையாளுவதற்கான வழி வகைகளையும் இந்த சம்மேளனம் ஏற்பாடு செய்து வருகின்றது.

பனைவெல்லம் காய்ச்ச ஏற்பாடுகள்

பனைவெல்லம் காய்ச்சுவதற்காக 1,065 வல்லுநர்களுக்குப் பதநீர் காய்ச்சும் கொப்பரைகள் வழங்கப்பட்டன. அவர்கள் கீழ்க் கண்ட பஞ்சாயத்துக் கௌன்சில்களின்

எல்லைக்குட்பட்டவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர் :—

(1) பெருந்துறை I, (2) பெருந்துறை II, (3) கோபிசெட்டிபாளையம், (4) அவனுசி, (5) ஊத்துக்குளி, (6) திருப்பூர்.

பெருந்துறை II பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் இந்த உதவிக்காக ரூ. 1,000 மானியமாக வழங்கியது. வழங்கப்பட்ட கொப்பரைகளின் செலவில் 50 சத விகிதத்தைச் சரிகட்ட இதர பஞ்சாயத்துக் கௌன்சில்கள் ஒவ்வொன்றும் ரூ. 3,000 வீதம் மானியமாக வழங்கின. கொப்பரைகளின் மொத்தச் செலவு ரூ. 32,000 ஆகும். இவற்றில் பாதித் தொகை கடனாகவும், மற்ற பாதி மான்யமாகவும் அளிக்கப்பட்டது. பெருந்துறை பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தின் 65 பேர்களும், இதர பஞ்சாயத்து யூனியன் வட்டாரங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 200 பேர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மொத்தம் 58 பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களிலிருந்து, பதநீர் காய்ச்சும் கொப்பரைகளைப் பெறுவதற்காக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மகாபலிபுரத்தில் பதநீர் விற்பனை நிலையம்

சென்ற ஆண்டு மகாபலிபுரத்தில் சென்ற ஆண்டு பட்டிப்புலம் ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பதநீர் விற்பனை நிலையத்தில் பல்வேறிடங்களிலிருந்து வந்த பெரியவர்களும், உயர்தர அதிகாரிகளும் இனிக்கும் பதநீரைப் பருகிப் பரமானந்தம் அடைந்தனர். இவ்வாண்டும் மகாபலிபுரத்தைக் கண்டுகளிக்க வரும் அனைவருக்கும் பதநீர் வழங்க உத்தேசித்து பதநீர் நிலையத்தைத் திறந்துள்ளனர். அனைவரும் இதைப் பருகி உடல் வளத்தைப் பெருக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

பதநீரில் உடலுக்குத் தேவைப்படும் உயிர்ச்சத்துக்களும், ஊட்டச்சத்துக்களும், நிறைந்துள்ளன. இது சிறந்த இயற்கை பானம்; பழங்கால வேந்தர்களும், வீரர்களும் போற்றிப் பருகிய சுத்த சைவபானம்.

உடலுக்குக் குளுமையும், இதமும் அளிக்கும் இயற்கை அமிர்தம். வெப்ப நோயுள்ளவர்கள் இதைத் தொடர்ந்து பருகினால் குணமாகும். எனவே மகாபலிபுரத்துக்கு வருகை தரும் அனைவரும் இனிக்கும் குளிர் பதநீரை மறவாதீர்கள். உங்கள் களைப்பைப் போக்கி, புத்துணர்ச்சி பெற ஒரு குவளைப் பதநீரை பருகிச் செல்லுங்கள். உங்கள் வசதியை முன்னிட்டு மிகக் குறைந்த விலையில் பாட்டில் 10 ந.பை விலையில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகாபலிபுரம்......பல்லவராட்சியின் சிறப்புச் சின்னம் !

பதநீரை நினைவூட்டும் புதுமைச் சின்னம் !!

மறவாதீர் பதநீரை ! **பாட்டில் 10 ந.பை**

அதிக சப்தம் காரணமாக இருதய நோய்கள் ஏற்படுகின்றன

மேற்கு ஜெர்மனியில் புதுப் புது கட்டிடங்கள் எழும்பி வருகின்றன. தொழில்கள் பல விஸ்தரிக்கப்படுகின்றன. இவை காரணமாக சப்தம் ஏகமாக ஏற்படுகின்றது. இந்த இரைச்சல் பேரொலி காரணமாக மனிதனின் நரம்பு தளர்ச்சியுற்று மிகவும் பாதிக்கப்படுகிறது. பிராங்க்பர்ட் நகரில் சமீபத்தில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் டாக்டர்களும், விஞ்ஞானிகளும் இந்த ஒலியைக் குறைப்பது அல்லது கட்டுப்படுத்துவது எப்படி என்பது பற்றி விவாதித்து இதற்கான நடவடிக்கையை எடுப்பது என்று முடிவு செய்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனி நகரங்கள் "நாளொரு மேனியாகவும் பொழுதொரு வண்ணமாகவும்" மாறி வருகின்றன. ஹாம்பர்க், டஸ்ஸல்டார்ப், பிராங்க்பர்ட், ஸ்டட்கார்ட், மூனிச் ஆகிய இடங்களில் வானளாவிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. தொழில்கள் பெருகித் தொழிற்சாலைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் காரணமாக இரைச்சலும் பேரொலியும் அதிகரித்துள்ளன. இந்தப் பேரொலி மனிதர்களுக்கு நரம்பு தளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த ஒலிகளை எப்படிக் குறைப்பது அல்லது எப்படி வெளிப்படாமல் செய்வது என்பதை குறித்து டாக்டர்களும், விஞ்ஞானிகளும் இங்கு கூடிய மகாநாடு ஒன்றில் ஆராய்ந்து வருகின்றனர். ஸ்டட்கார்ட்டில் நடைபெற்ற டாக்டர்கள் கூட்டம் ஒன்றில் இப்போது ஏற்படும் இருதய வியாதிகளுக்குப் பெரும்பாலான காரணம் இந்தப் பேரொலிதான் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் சப்தம் ஒரு அளவை மீறினால் அது நரம்புத் தளர்ச்சியை உண்டாக்குகிறதென்றும் அவர் கூறினர். இந்த ஒலி பாதிப்பது சம்பந்தமாக ரத்த ஓட்டம் பாதிக்கப்படுவதாகவும் இதனால் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் ரத்தக் குழாய் வியாதிகள் மூளை வியாதி முதலியன ஏற்படுவதாகவும் இவர் கூறினர்.

பிராங்க்பர்ட் மகாநாடு ஒன்றில் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் இந்த ஒலியை எப்படி ஒடுக்குவது என்பதைக் குறித்து ஆலோசித்தனர். பெர்லின், ஆக்கென், பிரான்ஸ்விக், ஸ்டட்கார்ட் ஆகிய இடங்களிலுள்ள "டெக்னலஜிகல்" பள்ளிகளில் இப்பிரச்சினை குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒலியை ஒடுங்கச் செய்வதற்கான வழிகள் மிக சீக்கிரமே கண்டுபிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெர்மன் இயந்திரத் தயாரிப்பு கம்பெனிகள் ஒன்றுகூடி இவ்விஷயமாக ஆலோசித்தன. பெரிய சக்தி உபயோகிக்கும்போதோ அல்லது தகடுகளை அடித்து ஒழுங்கு செய்யும் இயந்திரங்களை இயக்கும்போதோ சப்தம் ஏற்படுவதை தடுப்பதற்கில்லை என்று இவர்கள் முடிவு செய்தனர். ஆனால் இந்த இயந்திரங்களை ஒலி வெளியே செல்லாத அறைகளில் வைத்து இயங்கச் செய்யலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். எது எப்படியிருந்தாலும் இவ்விஷயமாக இப்போது தீவிரக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கொள்ளைக்காரன் எழுத்தாளராக மாறிய அதிசயம்!

மூனிக்—ஹென்றி ஜெஜர் என்பவர் பிரபல கொள்ளை கோஷ்டித் தலைவர். இவர் 1955–56-ல் "ரிப்கி-ஈகில்" என்ற நாவல் இவருக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது. இவருக்கு வயது 36. இந்தச் சிறுவயதில் சிறந்த எழுத்தாளர் என்று பெயர் வாங்கியவர் மேற்கு ஜெர்மனியிலேயே இவர் ஒருவர் தான். இவருக்கு 12 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவருடைய தண்டனைக் காலம் முடிவதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னதாகவே இவருடைய நன்னடத்தையை உத்தேசித்து தண்டனைக் குறைக்கப்பட்டு இவர் விடுதலை செய்யப்பட்டார். அவருடைய இலக்கியப் பணியும் சீக்கிரத்தில் விடுதலையானதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

கார்போ-ஹைடிரேட்டுகள்

[திரு. ஜி. எல். ரட் அவர்கள் எழுதிய விஞ்ஞான முறைச் சத்துணவு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது—ஆசிரியர்.]

கார்போஹைடிரேட்டுகளைத் தேர்ந்தெடுப்பது கஷ்டமில்லை. அவைகளை மிகையாக உபயோகிக்காமலிப்பதே முக்கியத் தொல்லை. அவைகளை எல்லா உணவுப் பொருள்களிலும் காணலாம். இவை அதிகப்படி காணப்படும் ரொட்டி, உருளைக் கிழங்கு, அப்பங்கள், இனிப்புக்கள் ஆகியவற்றை அதிகமாக உட்கொள்ளும்பொழுது, உடல் இவ்வாற்றல் உணவுகளைக் கொழுப்புச் சத்தாக மாற்றித் தனக்கு விபரீதம் விளைவித்துக் கொள்கிறது. (ஊன் கார்போ-ஹைடிரேட்டுக்கு மிகவும் எளிய மூலமாகும்.)

கார்போ-ஹைடிரேட்டின் முக்கிய இரண்டு வடிவங்கள்

1. மாவுகள்
2. சர்க்கரை வகைகள்

பலத் தாவரங்கள் தங்கள் உணவுச் சேமிப்பில் வெகு பகுதியை மாவு உருவமாக மாற்றி வைத்துக் கொள்ளுகின்றன. ஸ்டார்ச் (மாவு) என்பது குளுக்கோஸ் அலகுகளின் ரசாயனச் சேர்க்கையாகும். தானியங்கள் இதை மாவாகவே வைத்துக் கொள்கின்றன. பழங்கள் பழுக்கப் பழுக்க இதைச் சர்க்கரையாக மாற்றிக் கொள்ளுகின்றன. மாவை எளிதில் செரிக்க முடியாது. அதனால்தான் உருளை, தானியங்களைச் சுட்டோ வேகவைத்தோ அதை 'டெக்ஸ்ட்ரி'னாக மாற்றிக் கொள்ளுகிறோம். ஏனெனில் தாவரங்கள் அவைகளால் உண்ணப்படும் மாவை, நீர் கலக்க முடியாத பைகளில் சேமித்துக்கொள்கின்றன. நாம் இந்த மாவைச் செரிப்பதற்குமுன், இந்தப் பைகள் வெடித்துத் திறந்தாகவேண்டும்.

சர்க்கரை வகைகள் உடலின் நடைமுறைக்கு மிகவும் இன்றியமையாதவை. அவை ஐந்து வகைப்படும் :—

குளுக்கோஸ் : இது தாவர மாவுச் சத்திலிருந்து உண்டாகும் சாதாரண வகை.

ப்ரக்டோஸ் : இதுவும் தாவரங்களிலிருந்து கிடைக்கிறது. மிகவும் இனிப்புள்ளது. குளுக்கோசாக மாற்றப்படக் கூடியது.

சுக்ரோஸ் : இது கரும்பு, பீட், காரட் கிழங்குகள், முலாம் பழம் இவைகளில் காண்கிறது.

லாக்டோஸ் : இது மனித, மிருகப்பால் இருவகைகளிலும் காண்கிறது.

மால்டோஸ் : தானியங்களை முளை கட்டுவதாலும் புளிக்க வைப்பதாலும் உண்டாகிறது.

சர்க்கரை உடனுக்குடன் ஆற்றல் கொடுக்கக்கூடிய மூலப் பொருள். ஆதார கொழுப்புச் சத்தாக மாற்றப்படக் கூடியது. ஊன் உணவுகளில் இது காண்பதில்லை. வெள்ளைச் சர்க்கரை 100 சதவிகிதம் கார்போ-ஹைடிரேட் ஆனாலும், அது 'நசிக்கப்பட்ட' உணவாகும். அது உடலில் அனலாக மாறும்பொழுது உடலில் சுண்ணாம்பு அமைப்பைக் 'களவு' செயகிறது. 'சுத்தம்' செய்யப்படாத பழுப்புச் சர்க்கரை மிகவும் சத்துள்ளது. அது, உடலின் வளர்சிதை மாற்றத்திற்கும் அவசியமான உலோகங்களுடன் கலந்து செரிக்கப்படுகிறது. இக்காரணத்தால் கரும்புச் சர்க்கரை, பார்படாஸ், அசல் டெமெரரா சர்க்கரை வகைகள் மிகவும் சிறந்தவை.

ஆப்பிள், உலர்ந்த திராட்சை போன்ற எல்லா இனிப்புப் பழங்கள், கொட்டைகள், தேன், மேப்பிள் சர்க்கரை இதற்குச் சீரிய மூலங்களாம்.

நெல்லை மாவட்டத்தில் பனைத் தொழில்

[திருநெல்வேலி மாவட்ட சம்மேளன முன்னாள் காரியதரிசி திரு. எஸ். ஐயாத்துரை, B.A., அவர்கள் தயாரித்துத் தந்த அறிக்கையைத் தமிழில் தொகுத்து அளித்துள்ளோம்—ஆசிரியர்.]

தொகுப்பு : மாங்குடி - என். சி. எஸ். சௌந்தரராஜ்

தமிழ் நாட்டின் தென் பகுதியிலுள்ள நெல்லை மாவட்டமே பனைத் தொழிலின் பிறப்பிடம் என முதியோர் சொல்லுகின்றனர். இதுவும் ஒரு வகையில் உண்மையாகத் தானிருக்கும். ஏனென்றால் கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில் பனை நாடு, தெங்கு நாடு என்ற பெயரில் தனி நாடுகள் இருந்தன ; அங்குதான் பனையும், தென்னையும் அதிகமாக இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்பெயர் வந்திருக்காதே! மேலும் பனைத் தொழில் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளும் நெல்லை மாவட்டத்தில்தான் அதிகம், இம்மாவட்டப் பனைத் தொழில் வல்லுநர்கள் முருகனையும், பத்ரகாளியம்மனையும் வணங்குகின்றனர். இத்தெய்வங்கள் பனையேறுவதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் காப்பாற்றுவதாகவும் நம்புகின்றனர். மேலும் இது ஒரு தெய்வத் தொழில் என்பது அவர்கள் நம்பிக்கை. இத்தகைய தொழிலின் பழமை பற்றிய குறிப்புக்கள் எதுவும் இல்லை. எனினும் அண்மைக் காலத்தில் பனைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

நெல்லை மாவட்டத்தைப் 'பனை மர ஜில்லா' என்று மேலை நாட்டவர் அழைத்தனர். நெல்லையில் வாழ்ந்த ஜி. யூ. போப் முதலிய கிறிஸ்தவப் பெரியார்கள் பனைத் தொழில் வல்லுநர்களின் மேம்பாட்டுக்காகப் பெரிதும் உழைத்தனர். அவர்களின் ஒத்துழைப்பாலும், உதவியாலும் கல்வியறிவு பெற்றனர்

இம்மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர், நாங்குநேரி, சங்கரன்கோயில், ஸ்ரீவைகுண்டம், கோயில்பட்டி ஆகிய தாலுகாக்களில் பனை மரங்கள் அதிகம். திருச்செந்தூர், உடன்குடி, வள்ளியூர், திசையன்விளை, ஆலங்குளம், புளியங்குடி, வேம்பார் ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பனைவெல்லம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இம்மாவட்டத்தில் தான் வியாபார ரீதியில் பனைவெல்லம், புட்டு வெல்லம், பனங் கற்கண்டு, இதர பனைப் பொருட்கள் புராதன காலம் முதல் உற்பத்தி செய்யப்படுகின்றன. திசையன் விளையில் உற்பத்தியாகும் பனைவெல்லம் கேரளாவிலும், கன்னியாகுமரியில் சில இடங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது. திருச்செந்தூர், வேம்பார் பனைவெல்லத்தை திண்டுக்கல், திருச்சி வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். ஒரு சிறிதளவு பனைவெல்லம் திருச்செந்தூரிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. விருதுநகர் சந்தையில் கமிஷன் முறையில் பனங்கற்கண்டு விற்பனை செய்யப்படுகிறது. பொதுவாக பனைப் பொருட்களை ஏற்றிச்செல்ல லாரிப் போக்குவரத்து சாதனமே பயன்படுத்தப்பட்டுவருகிறது.

பனையோலையிலிருந்து வீட்டு உபயோகத்திற்குரிய பயன் பொருட்களையும் (Utility articles), வெல்லக்கூடைகளையும் (Jaggery basket), அழகுப் பொருட்களையும் (Fancy articles) உற்பத்தி செய்கின்றனர். திருச்செந்தூருக்குச் சென்று முருகப் பெருமானை தரிசித்து விட்டுத் திரும்புவோர் தங்கள் தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற அளவு பனையோலைப் பொருட்களை வாங்காமல் வரமாட்டார்கள். திருச்செந்தூர் என்றதுமே முருகன் பெயர் நினைவுக்கு வருவது போல பனையோலைப் பொருள், பனங் கற்கண்டு, புட்டு

வெல்லம் ஆகிய மூன்றும் கண்முன் தோன்றும். இத்தாலுகாவில் பனையோலைக் கைத் தொழிலில் சிறப்புற்று விளங்குவது மணப்பாடு. மணப்பாடு மகளிர் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் பனையோலைப் பொருட்களை நவநாகரிக முறையில் உற்பத்தி செய்து வருகிறது. திருச்செந்தூர், உடன்குடி, திசையன்விளை, வள்ளியூர், தென்காசி ஆகிய இடங்களில் இத்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது.

மேலும் திசையன் விளை, வள்ளியூர், உடன்குடி, வேம்பார் முதலிய இடங்களில் சேகரிக்கப்படும் ஈர்க்கில் (Leafstalks) ஒரு சிறு பகுதியை ஈர்க்கான் கூடை, மாட்டுக் குரிய வாய்க் கூடு, தட்டுகள் (trays) முதலியன செய்வதற்குப் பயன்படுத்துகின்றனர். பெருமளவு ஈர்க்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை அவர்கள் பெருக்கும் பிரஷ், யந்திரத்தை சுத்தப்படுத்தும் பிரஷ் முதலியன செய்யப் பயன் படுத்துகின்றனர். மாவட்ட சம்மேளனம் உட்பட மொத்தம் ஏழெட்டு நிறுவனங்களே ஈர்க்கு ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளன.

இதற்கு அடுத்தபடியாக பனை மட்டைகளின் பத்தல் (Petiole)-களிலிருந்து பனந் தும்பு (Palm Fibre) தயாரிக்கப்படுகிறது. திசையன் விளை, உடன்குடி, வள்ளியூர், புளியங்குடி முதலிய இடங்கள் பனந்தும்பு உற்பத்திக்குப் பெயர் பெற்றவை. இங்கு கிடைக்கும் பனந்தும்பில் சிறுபகுதியை தமிழ் நாட்டின் தேவைக்கான பிரஷ் செய்வதற் காக உள்ளூர் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். ஏராளமான பனந்தும்பு தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

முற்றிய பனங்கட்டைகளிலிருந்து வீட்டுக்கு வேண்டிய உத்திரங்கள் (Rafters) நாற்காலிகள், கட்டில்கள் முதலியன செய்கிறார்கள். பச்சை மட்டையிலிருந்து உரித் தெடுக்கப்படும் 'அகனி' (Stem Strips) நாரைக்கொண்டு கட்டில் பின்னுகிறார்கள்; 'புறணி' நாரைக்கொண்டு கூடைகள் செய்கிறார்கள். குருத்தோலையினால் செய்யப்பட்ட அழகுப் பொருட்களும் (Fancy articles), சுத்திகரித்துத் தரம் பிரிக்கப்பட்ட பனந்தும்பும் (dressed fibre), ஈர்க்கும் (Stalks) அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்தி ரேலியா, ஹாங்காங் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தில் அம்மாவட்ட சம்மேளனத்தின் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்ட பனைப்பொருட்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	ஆண்டு		பனைவெல்லம் (25 இராத்தல் கொண்ட மணங்கு)	பனந்தும்பு (அந்தரில்)	ஈர்க்கு (அந்தரில்)
1	1952	...	12.650	...	...
2	1953	...	35,500	1,100	1,800
3	1954	...	35,500	2,530	6,220
4	1955	...	19,700	2,280	7,340
5	1956	...	18,500	2,600	9,350
6	1957	...	19,500	2,860	8,400
7	1958	...	15,500	2,360	7,470
8	1959	...	9,800	2,000	4,900
9	1960	...	27,540	4,250	7,300

இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பனைப்பொருட்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி, கன்னியாகுமரி ஆகிய முக்கிய சந்தைகளில் (key markets) விற்பனை செய்யப்படுகின்றன. 1960 ஆண்டு இம்மாவட்டத்தின் சந்தை நிலவரத்தைக் கீழ்க்கண்ட குறிப்பின் வாயிலாக மிகத் தெளிவாக அறியலாம்.

1960-ம் ஆண்டில் சந்தை நிலவரம்

வரிசை எண்	மாதம்		பனைவெல்லம் (25 இராத்தல் கொண்ட மணங்கு)	பனங் கற்கண்டு (25 இராத்தல் கொண்ட மணங்கு)	புட்டு வெல்லம் (அந்தர்)	பனந்தும்பு (அந்தர்)	சர்க்கு (அந்தர்)
			ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை.	ரூ. ந.பை
1.	ஜனவரி	...	9=50	28=00	12=50	40=00	10=75
2.	பிப்ரவரி	...	10=50	28=00	12=00	42=00	10=50
3.	மார்ச்	...	10=50	26=00	11=00	42=00	10=50
4.	ஏப்ரல்	...	7=00	30=00	9=50	44=00	11=00
5.	மே	...	6=00	31=00	9=50	45=00	10=50
6.	ஜூன்	...	7=50	31=00	10=50	45=00	10=50
7.	ஜூலை	...	8=00	25=00	11=00	44=00	10=00
8.	ஆகஸ்ட்	...	8=60	23=00	11=50	45=00	10=00
9.	செப்டம்பர்	...	6=00	23=00	9=50	47=10	10=00
10.	அக்டோபர்	...	5=75	20=00	9=50	47=00	10=00
11.	நவம்பர்	...	3=00	25=00	11=00	49=00	9=75
12.	டிசம்பர்	...	7=25	30=00	10=75	50=00	9=75

திருநெல்வேலி மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம் திசையன்விளை, உடன்குடி, வள்ளியூர், புளியங்குடி, பாளையங்கோட்டை, வேம்பார், விளாத்திகுளம் முதலிய இடங்களில் கிளை நிலையங்களை நிறுவி பனைவெல்லம், பனந்தும்பு முதலியவற்றைக் கொள்முதல் செய்கிறது. மாநிலமெங்கும் உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பைக் கொள்முதல் செய்து, சுத்திகரித்து, தரம் பிரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள கடப்பாக்கம் பனந்தும்பு சுத்திகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும் பனந்தும்பு திருநெல்வேலிக்கு மாநில சம்மேளனம் லாரி மூலம் அனுப்பிவைக்கிறது. தற்போது 18—10—'63-ல் தென்னிலையில் புதிதாக நிறுவியுள்ள பனந்தும்பு நிலையமும் அதன் உற்பத்திப் பொருளை அங்குதான் அனுப்பிவைக்கும். பனந்தும்பு ஏற்றுமதியை முழுக்க முழுக்க கூட்டுறவு அடிப்படையின் கீழ் கொண்டுவரவேண்டுமென்ற பெருநோக்கோடு மாநில சம்மேளனம் பாடுபட்டுவருகிறது. இவ்வெண்ணத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொரு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களையும் (Members of the Primary Jaggery Manufacturing Co-operative Societies) சார்ந்ததாகும்.

நெல்லை மாவட்ட மக்கள் உணவுப் பொருட்களில் இனிப்புக்காகப் பனை வெல்லத்தை மட்டுமே சேர்க்கும் பழக்கத்தைப் பிறவியிலேயே பெற்றவர்களாக உள்ளனர். பெரும்பாலும் இம்மாவட்டத்திலுள்ள ஏழை மக்களை வாழவைத்ததும், வாழவைப்பதும் பனைதான்! இந்த நன்றி மறவாமல் இமயத்திலிருந்தாலும்கூட திருநெல்வேலிக்காரர் பனைவெல்லத்தைத்தான் உபயோகித்துவருகிறார். கரும்புச் சீனியோ, கரும்பு வெல்லமோ அவர்களுக்குப் பிடிப்பதில்லை. தொட்டில் பழக்கமல்லவா! எப்படி மறக்க முடியும்?

இத்தொழிலில் இன்று வரை பூரணமாகத் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. மாநில கதர்–கிராமக் கைத்தொழில் கழகமும், மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனமும் பிரச்சினைகளை அவ்வப்போது உன்னிப்பாகக் கவனித்து, கருத்தூன்றி ஆராய்ந்து நல்ல தீர்வுகாண முயற்சித்து வருகின்றன.

விறகுப் பற்றுக்குறை, பொருளாதாரக் குறைவு, இருப்புவைக்க வசதியான கிட்டங்கி (Godown) இல்லாமை, கரும்பு வெல்லத்தின் போட்டி முதலியவைகளை எல்லாம் துச்சமெனத் தூக்கி எறிந்து விட்டுத் தடையின்றி இத்தொழில் வளர மகத்தான மக்கள் ஒன்றுபட வேண்டும்; ஒப்புயர்வற்ற நிலையை உருவாக்கவேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ரெட்டைக்குளம் என்னும் ஊரில் நவீன முறையில் பனைவெல்லமும், பனஞ்சீனியும் தயாரிக்கும் முறை செய்து காட்டப்பட்டபோது, வேடிக்கை பார்ப்பதற்காக மக்கள் கூட்டம் திரண்டெழுந்தது. இன்று பல முயற்சிகளுக்கும், ஆராய்ச்சிகளுக்குமிடையே தினம் ஒன்றுக்கு ஒரு டன் பனஞ்சீனி உற்பத்தி செய்யும் ஆலையை உருவாக்கிவிட்டோம். பாரிக் கம்பெனியார் பனந்தோப்புகளிடையே சிறு ரயில் பாதை அமைத்து பொம்மை ரயில் மூலம் (Toy trains) பதநீரைத் தங்கள் பனஞ்சீனி ஆலைகளுக்குக் கொண்டுவந்த காலமும் இருந்தது. அன்று இங்கிலாந்தில் பீட்டுக்கிழங்கிலிருந்து சீனி தயாரிக்கும் முறை சரியாகப் பரவாததால், இங்கிருந்து பனஞ்சீனி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இது பழங்கதை! ஆனால் நாம் பேசப் போவது அந்த நாளையல்ல! கிராமக் கைத்தொழில் என்ற அடிப்படையில் பனைத் தொழில் புத்துயிர் பெற்ற நாளைப் பற்றித்தான்! 'நெல்லை மாவட்ட பனைத் தொழில் வரலாற்று ஏட்டிலே' சில வரிகள் பொன்னென மின்னுகின்றன என்றால் அவை இவைதாம்! 'கூழுக்கு வழியின்றிக் குந்திடவும் பாழ் குடிசையின்றி, உடுத்திட முக்கால் முழத் துணிக்கும் வகையின்றி, நெஞ்செலும்பு தெரிய, நெஞ்சில் நிறைந்த வேதனைக் கீறல்களோடு காட்சியளிக்கும் எம்மவர்க்கு வேண்டியது. உழைத்திட முழு நேர வேலை! தேவைக்குரிய வருவாய்!' என்று முழக்கமிட்ட சுதந்திர வேட்கை நிறைந்த காலம் அது!

பனஞ்சீனி உற்பத்தி

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன் கைத்தொழில் இலாகாவில் பெரும் பதவி வகித்த திரு. எல். பி. கிரீன் (L. B. Green Esq., M.B.E., Ag. Director of Industries) அவர்கள் ரெட்டைக்குளத்தில் தோல் தொழில் ஆராய்ச்சி இரசாயன நிபுணர் (Leather Research Chemist) செய்த ஆராய்ச்சி முடிவுகளை அபிவிருத்தி இலாகாவுக்கு தாம் எழுதிய

கடிதத்தில் No. 563—B 34 dated 12—12—35) குறிப்பிட்டுள்ளார். அபிவிருத்தி இலாகாவினரின் ஆணைப்படியே (G.O. Ms. No. 944 Development, dated 9th July 1934) இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. †இதன் மூலம் விற்பனைக்குரிய பனஞ் சீனியும், வெண்மையான பனைவெல்லமும் தயாரிக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அப்போதிருந்த அரசாங்கத்தின் உத்தரவுப்படி திறந்த கொப்பரையில் (Open pan) பதநீரைக் காய்ச்சி, பனைவெல்லம், பனஞ்சீனி முதலியன செய்வது சாத்தியம் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ள விவரங்களை நாம் அறிவதோடு, நுணமாண் நுழைபுலத்தால் ஆராயவும் கடமைப்பட்டவர்கள். இச்சோதனையை அவர்கள் மேற்கொண்ட நேரம் பனையேற்றுப் பருவம் முடிவுறும் இறுதிக் கட்டமாகும். எனவே தெளிவான ஒரு முடிவை அவர்களால் காண இயலவில்லை. மேலும் அப்போது கள்ளிறக்குவதே இலாபகரமான தொழிலாக இருந்ததால், பனைவெல்லத் தொழிலை யாரும் மேற்கொள்ள முன்வரவில்லை என்று தெரிகிறது. இத்தருணத்தில் சீனிக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டது போலும்! ‡எனவே ஆலைகள் பாதிக்கப்படாவண்ணம் பனஞ்சீனி உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவிக்கலாமென மேற்படி அதிகாரி அரசினருக்கு சிபாரிசு செய்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி தாலுக்காவிலுள்ள முனஞ்சிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ரெட்டைக் குளத்தில் (Rettaikulam, a hamlet of Nanguneri taluq in Tirunelveli District) திரு ஜே. வரதராஜ அய்யங்கார் பி.ஏ., பி.எல். (Sri J. Varadaraja Iyengar B.A., B.L. Advocate, Tirunelveli அளித்த மூலப் பொருளைக் கொண்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதற்குத் தினம் 2,000 இராத்தல் பதநீர் தேவையாயிருந்தது. இவ்வாராய்ச்சி பனையேற்றுப் பருவம் முடிந்தபின் தொடங்கப்பட்டதாலும், மழை பெய்யாததாலும் 1935-ம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பே தொடங்க முடியவில்லை. எனவே 8—5—'35 முதல் 21—6—'35 முடிய சுமார் 25 நாட்கள் பதநீர் காய்ச்சப்பட்டது. இதுகாறும் காய்ச்சப்பட்ட பதநீரின் அளவு 13 000 இராத்தல் இதிலிருந்து 200 இராத்தல் பனஞ்சீனியும், 670 இராத்தல் பனைவெல்லமும், 1,000 இராத்தல் கழிவுப் பாகும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏராளமான அதிகாரிகளும், வணிகர்களும், பொது மக்களும் பனஞ்சீனி உற்பத்தி செய்வதைப் பார்த்தனர்; பாராட்டினர். திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களிலிருந்து விவசாய அதிகாரிகளும் (Agricultural Demonstrators), கொச்சியிலிருந்து எக்சைஸ் கமிஷனர் அலுவலக குமாஸ்தாவும் இதைப் படித்துவர அனுப்பப்பட்டிருந்தனர்.

(தொடரும்)

† "It has been demonstrated that good marketable white sugar can be prepared from palmyrah Juice by the open pan system and that the molacess obtained in the process can be converted into Jaggery by reboiling with fresh juice. It has also been shown that it is possible to prepare from palmyrah Juice a higher quality Jaggery that is at present being prepared in the district."

—L. B. Green.

‡ "It is of course the case that the Sugar Factories in the Tinnevelly District experienced difficulty in getting all the raw material they require, but this was probably due to some extent to the scarcity of tappers able and willing to draw the palmyrah Juice on the terms offered If, therefore, it was found possible to organise some of the tappers into Co-operative Societies for the purpose of preparing Jaggery and sugar by the improved methods demonstrated by the department, the result might well be to increase the production of palmyrah Juice and in this case, the open pan system of sugar manufacture could be developed without detriment to the interests of the existing factories."

—L. B. Green.

"பனைத் தொழில்" வெளியீட்டு விழாவின்போது

நூலாசிரியர், பனைத் தொழில் காவலர்

திரு. கே. சம்பந்தம் அவர்களுக்கு

வழங்கிய

வாழ்த்து மடல்

மலர்வதெல்லாம் மணப்பதில்லை! மணப்பதெல்லாம் தெய்வத்தின்
மார்புதனில் தவழ்கின்ற மாலையாய் ஆவதில்லை!
கனிவதெல்லாம் இனிப்பதில்லை! இனித்தாலும் எளியவர்தம்
மனமகிழ பசிபோக்கும் கனியாக ஆவதில்லை!
வளர்தெல்லாம் விளைவதில்லை! விளைந்தாலும் நாட்டவர்க்கு
வளம்தருவதாய் நலம்தருவதாய் வாய்ப்பதில்லை!
எழுதுகின்ற அத்தனையும் இலக்கியமாய் அமைதில்லை! அமைந்தாலும்
தித்திக்கும் தமிழ்த்தாயின் அணியாக அமைவதில்லை!
சம்பந்தர் அன்றொருநாள் செந்தமிழில் சிவநெறியை
நம்மவர்க்கே பாடிவைத்தார்; தெய்வத்தின் தூதரானார்!
சம்பந்தர் இந்நாளில் இனியதொரு ஆய்வினையே
நம்தமிழில் வடித்துள்ளார்; புதுமைக்குச் சான்றானார்!
கவைக்குதவா நூல்களிங்குக் காவியமாய்க் காப்பியமாய்
அவையெங்கும் முழங்குகின்ற காலத்தில், தமிழ்நாட்டுப்
பழந்தொழிலைப் பனைத்தொழிலைப் பெருமையுறுந் தொழிலாக
வளமிகுந்த ஆய்வோடு நாட்டுகின்ற சம்பந்தர்
சிந்தையின் முதிர்ச்சியினை நூலென்று விரிக்கின்றார்!
எழுதுகின்ற நூலுக்கு வாழ்க்கையை விலையாக்கிப்
பழுதற்ற பட்டறிவின் துணையோடு இதுவரையில்
எவரேனும் எழுதாத செல்வத்தை நூலாக்கி
தவமாளும் தமிழ்த்தாய்க்கு மகுடமெனத் தந்திட்டார்!
நடம்பயிலும் ஆய்வுக்கு ஒருசான்று அவர்நூலே!
நடம்பயிலும் திறமைக்கும் ஒருசான்று அதுவேயாம்!
சிப்பிபோல நூல்கள்பல எழுதிவரும் இந்நாளில்
முத்துப்போல் ஒன்றெழுதி மேன்மையினை நாட்டுகின்றார்!
பதநீரின் சுவைபோலும் நூலிருக்கும்! இளநுங்கின்
இதமளிக்கும், எழுதியுள்ள அவர்நடையே! அவர்தொண்டோ
தமிழர்க்குப் பனையாகும்! நாட்டுக்கு வளமாகும்!
தமிழ்போல புகழோங்கிச் சம்பந்தர் வாழவேண்டும்!
பனைபோல நெடுநாளும் பொதுவுக்கே உழைக்கவேண்டும்!
சுனைபோல புதுத்திட்டம் வரும்நாளில் தரவேண்டும்!
வாழ்க வாழ்க **சம்பந்தர்** பனைத்தொழிலின் காவலராய்!
வாழ்க வாழ்க **இராமசாமி** பனைத்தொழிலின் தந்தையராய்!

ஆர்வலன்,

கோ. செல்வம், எம்.ஏ., பி.எல்., பி.டி.
(வழக்கறிஞர்)

Madras State Khadi and Village Industries Board

(SECRETARIAT)

FORT ST. GEORGE, MADRAS

Memorandum No. 3841/F-1/64-1, Dated 13—2—1964.

Sub: **PROHIBITION—District Prohibition Advisory Council and Taluk—Prohibition Abolition of—Proposal orders—Passed.**

Ref: **G.O.Ms. No. 4067, Home, Department, dated 31—12—1963.**

A copy of the G. O. cited is communicated to the Secretary, Village Industries Wing and all Village Industries Officers for information and necessary action.

V. PADMANABHAN,
Secretary.

To

The Secretary, Village Industries Wing, Madras-4. (with encl.)
Copy to Deputy Director (Industrial Co-operatives), Madras-4. (with encl.)
Copy to all Village Industries Officers (with encl.)
Copy to Secretary, State Palmgur Federation Limited, Madras-17. (with encl.)

(Copy of G.O.—Page No. 21)

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்—குளித்தானைத் தீத்துரீஇ யற்று

Copy of G.O. Ms. No. 4067, Home, dated 31st December 1963.

(ABSTRACT)

PROHIBITION—District Prohibition Advisory Council and Taluk Prohibition Committees—Abolition of—Proposal—Orders passed.

READ:

G.O. Ms. No. 2236, Home, dated 4—8—1956.

From the Collector of South Arcot, Ref. No. PR 92/60, dated 5—8—1960.

From the Collector of Tiruchirapalli, C.R. No. 52429/59, dated 16—4—1960.

From the Board of Revenue (C.T.) C.R. No. 25188/59/Fl/ dated 20—5—1960 and 10—6—1960.

From the Inspector-General of Police Madras, Ref. Re. 3359/C3/60, dated 8—10—1960.

From the Board of Revenue (C.T.) B.P. Rt. 1072/61, dated 4—4—1961.

ORDER:

The Government of Madras have examined the following suggestions in consultation with the Inspector-General of Police and the Board of Revenue (C.T.) Madras.

(1) whether the District Prohibition Advisory Councils may be abolished; and

(2) whether the taluk Prohibition Committees may be allowed to continue.

2. The Government direct—(i) that the District Prohibition Advisory Councils in all Districts except the City of Madras be abolished and that through Standing Committees on Health and Welfare including prohibition the District Development Councils will attend to the functions hitherto attended by the District Prohibition Advisory Councils;

(ii) that the District Development Council may invite the Superintendent of Police and the District Village Industries Officer to serve on the Standing Committee on Health and Welfare including Prohibition under section 8 (4) of the Madras District Development Council Act, 1958, whenever subjects relating to Prohibition are included in the agenda; and

(iii) that the Taluk Prohibition Committees be allowed to continue to function.

3. All the Collectors except the Collector of Madras are requested to enjoin upon the Taluk Prohibition Committees to be effective in their work.

(By Order of the Governor)

RAZAK HUSAIN,
Deputy Secretary to Government.

Rc. No. 29064/63 VI-(1)

State Khadi and Village Industries Board,
Village Industries Wing,
2, Desikachari Road, Madras-4.

Dated: 6—2—1964.

CIRCULAR

Sub: **INDUSTRIAL CO-OPERATIVES — Formation of Cane and Bamboo Workers' Co-operative Society.**

A question has been raised whether the Co-operative Societies for Cane and Bamboo worker's may be registered by the State Khadi and Village Industries Board. This has been carefully examined in this office and the following instructions are issued

Attention is invited to G.O. Ms. No. 3116, Food and Agriculture Department, dated 3—10—'62 (a copy of which was communicated in Board's Secretariat Memo No. 11633/FII 61-17 dated 20—10—1962). According to this G.O. proposals for the development of the cane and bamboo industry will be forwarded to the Board for disposal. Government have also specified the Cane and Bamboo industry as a Village Industry. The Secretary of the State Khadi and Village Industries Board has been vessted with all powers under the Madras Co-operative Society Act in respect of Village Industrial Co-operatives other than Khadi. It is, therefore, clear that matters relating to the development of cane and bamboo industry including the formation of Industrial Co-operatives for the benefit of the artisans of the industry will have to be attended to by the State Khadi and Village Industries Board. The Village Industries Officers are, therefore, requested to bear these instructions in mind and submit proposals for improving this industry by formation of Industrial co-operatives, etc., to the State Khadi and Village Industries Board. The Panchayat union Commissioners may be informed of the position suitably.

The receipt of this Circular may be acknowledged.

V. PADMANABHAN,
Secretary,